OS .No. 68/2022 நாள் : 04.07.2026

<u>PW2 குறுக்கு விசாரணை</u>

நான் ஐடிஐ வெல்டர் படிப்பு படித்துள்ளேன். வாதியின் கணவர் குணசேகரனை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு சிறுவயது முதல் தெரியும், அவரது வீட்டிற்கும், என் வீட்டிற்கும் இடையே 50 மீட்டர் தூரம் இருக்கும், குணசேகரனின் அப்பா பெயர் தெரியாது. வாதி தாவா சொத்தில் குடியேறுவதற்கு முன் எங்கு வசித்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 1,2,3 வாதிகள் என்ன வேலை செய்து வருகிறார்கள் என்றால் 1ம் வாதி ஊரில் உள்ளார், 2ம் வாதி சென்னையில் வேலை செய்து வருகிறார், 3ம் வாதி திருமணமாகி சென்று விட்டார். வாதி வீட்டிற்கு அடமான தொகை ரூ.1,70,000/-ம் தொகை கொடுத்தபோது நான் அந்த இடத்தில் இல்லை. பணம் கொடுத்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. உறுதிமொழி ஆவணம் எப்பொழுது, எங்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. ஆனால் சிவசக்தி நகர், பால்பண்ணைச்சேரியில் உள்ள எனது நண்பர் வீட்டில் வைத்து மகாலிங்கம் எழுதிக்கொடுத்தார். அந்த உறுதிமொழி ஆவணத்தில் நான், சக்திராஜன், குரு ஆகியோர் கையெழுத்து செய்தோம், அதில் முதலில் உள்ள கையெழுத்து எனது கையெழுத்தாகும். எத்தனை பத்திரத்தில் உறுதிமொழி ஆவணம் எழுதப்பட்டது என்றால் இரண்டு பத்திரங்களில் எழுதப்பட்டது, அந்த பத்திரங்கள் எவ்வளவு ரூபாய்க்கான பத்திரங்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த பத்திரங்களில் நாங்கள் மூவர் மட்டும்தான் கையெழுத்து செய்தோம், வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. அந்த பத்திரத்தில் ஒரே பேனாவினால்தான் கையெழுத்து செய்தோம்.

எந்த மையினால் கையெழுத்து செய்தேன் என்று ஞாபகமில்லை. பிரதிவாதியின் வீட்டில் வாதி குடியிருந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு பக்கத்து வீடு பரணி வீடு , எதிர்வீடு கோழிக்கடை பாண்டி வீடு உள்ளது. உறுதிமொழி ஆவணத்தில் கண்ட தொகையை மகாலிங்கம் வாதிக்கு கொடுத்து விட்டார் என்றும், வா.சா.ஆ.2ன் முதல் பக்கத்தில் வீட்டின் உரிமையாளரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பின்தாளில் உள்ளது. பின்பக்கத்தாள் என்பது வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 1ம் வாதி அடமானக்கடன் தீர்ந்து விட்டதற்கான ஆவணத்தை ஒத்துக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்தபோது இரண்டு முத்திரைத்தாளில் கையெழுத்து செய்தேனா என்றால் ஞாபகமில்லை. வாதிகளின் குடும்பத்தைபற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.